விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 238 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 29 திங்கட்கிழமை (14.08.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## 13ஆவது திருத்தச் சட்டத்தை மேலும் விஸ்தரிக்க இது தருணம் அல்ல

### பொதுஜன பெரமுன

(கொழும்பு)

13ஆவது திருத்தத்தை மேலும் விஸ்தரிப்பதற்கு இது உரிய தருணமல்ல என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

கட்சியின் நிலைப்பாட்டை ஜனாதிபதியிடம் தெரியப்படுத்துவோம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக உள்ள பொதுஜன பெரமுனவின் பிரிவும் இந்த நிலைப்பாட்டை ஆதரித்துள்ளது.

பலவீனமான பொரு ளாதார நிலை காரண 11

இந்தியாவுக்கான

## இலங்கையின் புதிய உயர்ஸ்தானிகர் நியமனம்



(கொழும்பு)

இந்தியா - புதுடில்லிக்கான இலங்கையின் புதிய உயர்ஸ்தானிகராக சேனுகா திரேனி செனவிரத்ன நியமிக்கப்படவுள்ளார்.

எதிர்வரும் செப்ரெம்பரில் தனது கடமைகளை நிறைவு 11

## குளவி கொட்டியதில் மூதாட்டி உயிரிழப்பு

### காரைநகரில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - காரைநகர் பகுதியில் வசிக்கும் வயோதிபப் பெண் ஒருவர் குளவி கொட்டுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில், குறித்த பெண் நேற்று முன்தினம் காலை 6.30 மணிக்கு காரைநகர் - கள 11

வடக்குக் கிழக்கில் உள்ள

## விகாரைகளில் கை வைத்தால் தலைகளை எடுப்பேன்!

### காடையர் பாணியில் எச்சரித்தார் மேர்வின்



(கொழும்பு)

வடக்கு கிழக்குப் பகுதிகளில் உள்ள விகாரைகளில் கை வைப்போரின் தலைகளை எடுப்பேன் என முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா எச்சரித்துள்ளமை தமிழ்த் தரப்பினரின் கடுமையான கண்டனங்களுக்கு உள்ளாகியுள்ளது.

மேர்வின் சில்வாவின் இந்த உரையானது, இனங்களுக்கு இடையில் பதற்றத்தை தோற்றுவிக்கும் வகையில் அமைந்துள்ள விமர்சனம் 12

## மோ.சைக்கிள் விபத்து வயோதிப மாது பலி

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம் பழைய வட்டக்கச்சி பகுதியில் இடம் பெற்ற வாகன விபத்தில் வயோதிப மாது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இவ் விபத்து தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

குறித்த வயோதிப மாது வீதியால் பயணித்தவேளை மோட்டார் சைக்கிளுடன் 11

## அரசியல் தீர்வு விடயத்தை ரணில் பெற்றுத் தரமாட்டார்

### சிறீதரன் எம்.பி



(கிளிநொச்சி)

ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் தான் ஜனாதிபதியாக வருவதற்கு 13ஆம் திருத்தச்சட்டத்தினை கொண்டு வருவதாக ஒரு மாய தோற்றத்தை ஏற்படுத்துகின்றார். அவர் அரசியல் தீர்வையும் பெற்றுத் தரமாட்டார் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். 11

## யாழ்.இந்துக் கல்லூரி மாணவன் விபத்தில் பலி

### நுணாவிலில் துயரம்



(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஏ9 பிரதான வீதியில் கைதடி நுணாவில் வைரவர் கோவிலடியில் இடம்பெற்ற விபத்தில் 11

## ஹெகலியவுக்கு எதிராக கையெழுத்து வேட்டை

(கொழும்பு)

சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவுக்கு எதிராக பத்தாயிரம் கையெழுத்துக்களை சேகரிக்கும் நிகழ்ச்சி நேற்று நாவலப்பிட்டி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக இடம்பெற்றது.

அமைச்சருக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தியினால் பாராளுமன்றத்தில் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இந்த கையெழுத்து சேகரிப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

பத்தாயிரம் 11

## தமிழர் மரபுரிமைகளை பாதுகாக்க ஒன்றிணைவோம்

### ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு

(யாழ்ப்பாணம்)

வட-கிழக்கின் அனைத்து பிரதேசங்களிலும் மிக வேகமாக தினம் தினம் மரபுரிமை ஆக்கிரமிப்புக்கள் நடைபெற்று வருகின்றது.

இதனை எதிர்கொள்ள சரியான பொறிமுறை ஒன்று அனைத்து தமிழ்த் தரப்புக்களும் இணைந்து மேற்கொள்வது அவசியமானது என ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பின் அமைப்பாளர் தவத்திரு. அகத்தியர் 11

## மட்டுவிலில் வீட்டிலிருந்து சடலம் மீட்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் கிழக்கு பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் தூக்கிட்ட நிலையில் ஆண் ஒருவரின் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## நயினாதீவு
## ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில்
## பாலஸ்தாபன கும்பாபிஷேகம் - 2023

அம்பிகை அடியார்களே!

இலங்கையின் வடபால் சப்ததீவுகளின் நடுநாயகமாக விளங்கும் நயினாதீவில் புவனேஸ்வரி பீடத்தில் வீற்றிருந்து அருளாட்சி புரியும் அன்னை ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயம் புனருத்தாரணம் செய்வதற்காக, நிகழும் சோபகிருது வருஷம் ஆவணி மாதம் 15 ஆம் நாள் வெள்ளிக்கிழமை (01.09.2023) பாலஸ்தாபன கிரியைகள் ஆரம்பமாகி, ஆவணி மாதம் 17 ஆம் நாள் (03.09.2023) ஞாயிற்றுக்கிழமை ரேவதி நட்சத்திரமும், சதுர்த்தி திதியும் அமிர்தயோகமும் கூடிய காலை 9.01 மணிமுதல் 11.05 மணி வரையுள்ள துலாலக்கின சுபவேளையில் பாலஸ்தாபனம் வேத, ஆகம முறைப்படி சிறப்புற நடைபெறத் திருவருளும் குருவருளும் கைகூடியுள்ளது.
எனவே அடியார்கள் அனைவரும் கலந்து கொண்டு அம்பிகையினுடைய திருவருளைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டிக்கொள்கின்றோம்.

**அறங்காவலர் சபை**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் - நயினாதீவு**

(C-7062)



## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக படவரைஞருமாகிய **ந. அகிலன்** அவர்களின் அன்புத் தாயார்

**அமரர் நடராசா சுந்தரேஸ்வரி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம் - வட மாகாணம்**

(16707)



## சொர்க்கம் திருமண சேவை

- இலங்கையில் பிறந்த 29 வயது கார்த்திகை-2 நட்சத்திரமுடைய மற்றும் 30 வயது ரோகினி - 4 நட்சத்திரமுடைய மணமக்களுக்கு தகுந்த மணமகன்களை கனடாவில் எதிர்பார்க்கிறோம்.
- கனடாவில் வசிக்கும் 32 வயது உத்தரம் - 1 நட்சத்திரமுடைய மற்றும் 33 வயது கார்த்திகை-2 நட்சத்திரமுடைய மணமகன்களுக்கு தகுந்த மணமக்களைஇலங்கையில் எதிர்பார்க்கிறோம்.
- லண்டனில் வசிக்கும் 38 வயது மற்றும் 47 வயது விவாகரத்து மணமகன்களுக்கு தகுந்த மணமக்களை இலங்கையில் எதிர்பார்க்கிறோம்.

(16709)

**001 416 666 1855 (கனடா)**
**077 887 6969**
**077 200 0230 (யாழ்ப்பாணம்)**



## நாகபூஷணி திருமண சேவை

வைத்தியர், பொறியியலாளர், கணக்காளர், அரச உத்தியோகத்தர், வங்கியாளர், ஆசிரியர்கள், தனியார் துறையினர் மற்றும் உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் பல்லாயிரக்கணக்கில் உள்ளனர்.
மிகப் பொருத்தமான ஜாதகங்களை உடன் பெற்றுக்கொள்ளலாம்.

264. ஆடியபாதம் வீதி.
கொக்குவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

**021 222 9306,071 999 9306**
**077 138 7596**

(C-7051)


# இம் மாத இறுதியில் உ/த பரீட்சை முடிவுகள்

க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் வெளியாகியுள்ளதாக சமூக ஊடகங்களில் தவறான பதிவுகள் வெளியிடப்பட்டு வருவதாக உண்மைச் சரிபார்ப்பு இணையத்தளம் தெரிவித்துள்ளது.

இதுவரை பெறுபேறுகள் வெளியிடப்படவில்லை என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தர உறுதிப்படுத்தியுள்ளார்.

இவ்வாறான போலிசெய்திகளைப் பார்த்து ஏமாற வேண்டாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

மேலும் க.பொ.த உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை ஓகஸ்ட் மாத இறுதிக்குள் வெளியிட எதிர்பார்த்துள்ளதாக ஜயசுந்தர கூறியுள்ளதாக உண்மைச் சரிபார்ப்பு இணையத்தளம் மேலும் குறிப்பிட்டுள்ளது. (4.7)

## 318 கிலோவுக்கு அதிகமான பீடி இலைகள் மீட்பு

(கொழும்பு)

கற்பிட்டி - சேரக்குளி கடற் பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 318 கிலோ கிராம் பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த கடற்பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு மேற்கொண்ட விஷேட சுற்றிவளைப்பின் போதே மேற்படி பீடி இலைகள் கைப்பற்றப்பட்டதாக கற்பிட்டி கடற்படையினர் தெரிவித்தனர்.

ஒன்பது உரப்பைகளில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ள போதிலும், இதுதொடர்பில் சந்தேக நபர்கள் எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்பட்ட இந்த பீடி இலைகள் கடற்படை நடவடிக்கை காரணமாக கடற்பிரதேசத்தில் இருந்து வெளியே எடுத்துச் செல்ல முடியாத நிலையில், கடத்தல்காரர்களால் சேரக்குளி கடற்கரை பகுதியில் கைவிடப்பட்டிருக்கலாம் என தாம் சந்தேகிக்கப்பதாகவும் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

இவ்வாறு கடற்படையினரால் கைப்பற்றப்பட்ட பீடி இலைகள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கடற்படையின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4.7)

## கொழும்பில் 3 மாதங்களில் நடத்துநர்கள் இல்லாத பஸ்கள்

நடத்துனர்கள் இல்லாத பேருந்துகள் இன்னும் 3 மாதங்களில் கொழும்பு நகரில் சேவையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போது, சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன, இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் இலத்திரனியல் அட்டை மூலம் மட்டுமே அதில் பயணம் செய்ய முடியும் என்றும், இந்த பஸ்களை இயக்குவதன் மூலம் கொழும்பில் போக்குவரத்து நெரிசலை குறைக்க முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (4.7)

## 10 ஆம் தரத்தில் சாதாரணதரப் பரீட்சை
### கல்வி அமைச்சர் சுசில்

எதிர்காலத்தில் கல்வி பொதுதராதர சாதாரண பரீட்சையை 10 ஆம் தரத்தில் நடத்துவதற்கான வாய்ப்புகள் தொடர்பில் ஆராய்ந்து வருவதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

கொழும்பு றோயல் கல்லூரியில் நேற்று நடந்த விழாவில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

10 ஆம் தரத்தில் கல்வி பொதுதராதர சாதாரண பரீட்சையை நடத்துவதற்கான வாய்ப்பு தொடர்பில் தற்போது உரிய தரப்பினருடன் கலந்துரையாடி வருவதாகவும், எதிர்காலத்தில் கல்வி மாற்றத்திலும் இந்த விடயம் பரிசீலிக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (4.7)


## மணிவிழா நாயகிகளை மனதார வாழ்த்துகின்றோம்



திருமதி
**சி.விஜயகோபால்**
இ.ஆ.சே I
(B.A Diploma in Education)



திருமதி
**மா.தர்மானந்தசிவம்**
இ.ஆ.சே I
(B.A Diploma in Education)



திருமதி
**தி.சண்முகலிங்கம்**
இ.ஆ.சே I
(பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி)



திருமதி
**உ.பஞ்சமூர்த்தி**
இ.ஆ.சே I
(பயிற்றப்பட்ட இந்து சமயம்)

(C-7061) Best wishes சமூகம், யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈழத்து எழுத்தாளரும், சமூக சிந்தனையாளரும், உளவள ஆலோசகருமான கோகிலா மகேந்திரனின் "குடும்பம் ஒரு கதம்பம்" நூல்வெளியீட்டுவிழா நேற்று முன்தினம் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

# விவசாயிகளின் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும்

## வடக்கு மாகாண ஆளுநர் உறுதி

(சாவகச்சேரி)

**வடக்கு மாகாண விவசாயிகள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு எட்டப்படும் என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி சார்ள்ஸ் உறுதியளித்துள்ளார்.**

கடந்த வியாழக்கிழமை சாவகச்சேரியில் இடம்பெற்ற ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியோடு சிறு விவசாயிகளுக்கு உரம் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்படி அவர் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

ஜப்பானிய அரசாங்கத்தின் நிதி உதவியோடு ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் ஊடாக சிறு விவசாயிகளுக்கு இலவச உரம் வழங்கும் செயற்பாடு இங்குள்ள சிறு விவசாயிகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்ததொன்று.

ஜப்பான் நாட்டின் இந்த உதவித்திட்டம் ஊடாக சிறு விவசாயிகள் பயிர்ச்செய்கைகளை சிறந்த முறையில் மேற்கொண்டு தமது வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொள்ள முடியும்.

எமது நாட்டில் தற்போது நிலவுகின்ற பொருளாதார நெருக்கடி நிலைமையில் ஜப்பான் அரசாங்கம் மற்றும் அந்த நாட்டு மக்களுடைய இந்த உதவி வரவேற்கத்தக்கது.



ஜப்பானிய அரசாங்கம் எமது நாட்டிற்கு பல உதவித்திட்டங்களை வழங்கியுள்ளது. அதன் ஓர் அங்கமே விவசாயிகளுக்கு உரம் வழங்கும் செயற்பாடு.

வடக்கு மாகாணத்தில் உள்ள விவசாயிகள் பல பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். இயற்கை அனர்த்தத்தால் பயிர்கள் அழிவது, அழிவில் இருந்து தப்பி அறுவடை செய்யும் பொருட்களுக்கு உரிய உத்தரவாத விலை கிடைக்காமை, அறுவடையின் பின்னர் உற்பத்திப் பொருட்களை பாதுகாத்து பதப்படுத்த முடியாமை மற்றும் சந்தைப்படுத்த முடியாமை என பல போராட்டங்களுக்கு மத்தியில் வாழ்க்கை நடத்தி வருகின்றனர்.

அந்தவகையில் நாம் விவசாயிகளின் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை தேடிக் கொண்டிருக்கிறோம். அதில் சில தாமதங்கள் ஏற்பட்டாலும் விரைவில் விவசாயிகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வு எட்டப்படும். ஜனாதிபதி விவசாயிகளின் நலன் கருதி பல நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறார் என மேலும் அவர் தெரிவித்திருந்தார். (ந்-30)

# அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்ற யாழ்.மாணவன்



(அராலி)

அகில இலங்கை ரீதியில் நடைபெற்ற UCMAS National championship 2023 போட்டியில் யாழ்ப்பாணத்தை சேர்ந்த மாணவன் ஒருவன் முதலிடம் பெற்றுள்ளான்.

நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த மண்டபத்தில் இடம்பெற்ற போட்டியில் சுதர்சன் அருணன் என்ற சிறுவனே அகில இலங்கை ரீதியில் முதல் இடத்தைப் பெற்றுள்ளார். இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் ஆரம்பப் பாடசாலையில் முதலாம் தரத்தில் கல்வி கற்று வருகின்றார். (ந்-104)

# போதைக்கு அடிமையானவர்களை மீட்க வடக்கில் விசேட சிகிச்சை நிலையம்

## வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர்



(யாழ்ப்பாணம்)

வடக்கில் போதைக்கு அடிமையானவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான சிகிச்சை நிலையம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

யாழ். பண்ணையில் அமைந்துள்ள மாகாண சுகாதார திணைக்களத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடந்த ஒரு வருடமாக வடக்கு மாகாணத்தில் போதைப் பொருள் பாவனையாளர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. அவ்வாறு போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் வைத்தியசாலைக்கு வரும் போது அங்கு அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்படுகின்றது. இருப்பினும் முற்று முழுதாக போதைக்கு அடிமையானவர்களை நீண்டகாலமாக வைத்து பராமரித்து சிகிச்சை அளிக்கும் சிகிச்சை நிலையம் வடபகுதியில் இல்லை.

அவ்வாறான ஒரு விசேட நிலையத்தை அமைப்பதாயின் அதற்கு பல்வேறுபட்ட வசதிகள் தேவையாக இருக்கின்றன. இந்நிலையில் இவ்வாறானதொரு நிலையத்தை வடக்கில் அமைக்க வேண்டும் என்று வடக்கு மாகாண ஆளுநர் முயற்சிகளை எடுத்திருக்கின்றார்.

அதேநேரத்தில் புதிதாக ஒருவர் போதைக்கு அடிமையாகாமல் குடும்ப உறுப்பினர்களும் சமூகத்தவர்களும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ந்-33)



கல்விப் பொதுத்தராதர சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி இலவசக் கருத்தரங்கு நேற்று யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. வடமாகாணத்திலுள்ள மாணவர்கள் பயன்பெறும் வகையில் சிரேஷ்ட சட்டத்தரணி வேலாயுதம் தேவசேனாதிபதியின் கொழும்பு அருள் கல்வி வட்டத்தின் அனுசரணையுடன் இக் கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டது.

# வடக்கில் இன்று முதல் டெங்கு ஒழிப்பு வாரம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்தில் இன்று திங்கட்கிழமை தொடக்கம் ஒரு வார காலம் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட உள்ளதாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், எமது பகுதிகளில் டெங்கின் தாக்கம் குறைவாக காணப்பட்டாலும் எதிர்வரும் மாதங்களில் மழை வரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே டெங்கின் தாக்கம் அதிகரிக்க கூடும்.

டெங்கு ஒழிப்பு தொடர்பில் வடமாகாணத்தில் கலந்துரையாடல்கள் ஆளுநர் தலைமையில்அண்மையில் நடைபெற்றது.

அதில் 14 ஆம் திகதி தொடக்கம் ஒரு வாரத்துக்கு வடமாகாண த்தில் டெங்கு ஒழிப்பு செயற்றி ட்டத்தை முன்னெடுக்க வுள்ளதாக தீா்மானிக்கப்பட் டது.

இந்த வருடம் இலங்கை பூராகவும் கடந்த ஐந்தரை மாதங்களில் 45,612 பேருக்கு டெங்கு நோய் ஏற்பட்டிருக்கிறது.

இதில் யாழ்.மாவட்டத்தில் 1472 பேருக்கும் கிளிநொச்சி மாவட்டத்தில் 62 பேருக்கும் மன்னார் மாவட்டத்தில் 76 பேருக்கும் வவுனியா மாவட்டத்தில் 103 பேருக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 100 பேருக்கும் டெங்கு இருப்பதாக அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது.

ஆகவே யாழ். மாவட்டத்தில் அதிகளவிலானோர் டெங்கு நோய்க்கு உள்ளாகி இருக்கின்றார்கள். குறிப்பாக யாழ். மாவட்டத்தில் கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு, நல்லூர் மற்றும் நகர சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் அதிகளவானோர் டெங்கு நோய்க்கு உள்ளாகி இருக்கின்றனர் என தெரிவித்தார். (ந்-33)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாண கராத்தே போட்டியில் வவுனியாவிற்கு 4 பதக்கங்கள்





வடமாகாண ரீதியிலான 2023 ஆம் ஆண்டுக்கான பாடசாலை மட்ட கராத்தே சுற்று போட்டி நெல்லியடி மத்திய கல்லூரியில் 11, 12 ஆம் திகதிகளில் நடைபெற்றன.

இப் போட்டியில் நிப்பான் கராத்தே சங்கத்தை சேர்ந்த இரு மாணவிகள் 4 வெண்கலப் பதக்கங்களை பெற்று வ/இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய பாடசாலைக்கும், கழகத்திற்கும் பெருமை சேர்த்துள்ளனர்.

இவ் வெற்றி பெற்ற சாதனையாளர்களுக்கு பொறுப்பாசிரியராக ஜே.டி.ரெஜினோட், ஞா.ஞானகீதன் ஆசிரியர் பயிற்றுவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-299)

## மகளிர் உலகக் கிண்ண கால்பந்துத் தொடர்

# அரையிறுதிப் போட்டியில்

## அவுஸ்திரேலியா-இங்கிலாந்து அணிகள் மோதல்



2023 ஆம் ஆண்டுக்கான பெண்களுக்கான உலகக் கிண்ண கால்பந்து தொடரின் காலிறுதி போட்டிகள் அனைத்தும் தற்போது நிறைவுக்கு வந்துள்ளது. அதன்படி நேற்று முன்தினம் இடம்பெற்ற இரண்டு போட்டிகளில் அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகள் வெற்றி பெற்றுள்ளன.

அவுஸ்திரேலியா அணி பிரான்ஸுக்கு எதிரான போட்டியில் பெனால்டி ஷூட் அவுட்டில் 7-6 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று வரலாற்றில் முதல் முறையாக மகளிர் உலகக் கிண்ண அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

உலக தரவரிசையில் 10 ஆவது இடத்தில் இருக்கும் அவுஸ்திரேலியா, ரவுண்ட் 16 சுற்றில் டென்மார்க்கை 2-0 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

அதேநேரம் தர வரிசையில் 5 ஆவது இடத்தில் உள்ள பிரான்ஸ், 4-0 என்ற கோல் கணக்கில் மொராக்கோவை வீழ்த்தி காலிறுதிக்கு முன்னேறியிருந்தது.

மற்றுமொரு காலிறுதி போட்டியில் இங்கிலாந்து மற்றும் கொலம்பியா அணிகள் பலப்பரீட்சை நடத்தின. இதில் இங்கிலாந்து 2 - 1 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்று அரையிறுதிக்கு முன்னேறியது.

போட்டியின் முதல் பாதியில் லீசி சாண்டோஸ் அடித்த கோல் காரணமாக கொலம்பியா அணி முன்னிலை வகித்தாலும் 45 ஆவது நிமிடத்தில் லோரன் ஹெம்ப்பும் 63 ஆவது நிமிடத்தில் அலெக்ஸியா ருஸ்ஸோவும் அடித்த கோல்கள் இங்கிலாந்தின் வெற்றி வாய்ப்பை உறுதிப்படுத்தியது.

இந்த வெற்றியின் மூலம் நாளை மறுதினம் இடம்பெறவுள்ள அரையிறுதி போட்டியில் அவுஸ்ரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதவுள்ளன. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2889

**தனோராஜ்**

தோழி உங்க போட்டோவ பார்த்துட்டே டீய குடிச்சா போதும்.பிரியாணி சாப்பிட்ட மாதிரி தெம்பு வரும்.அதுக்கு டீ ரெடியா இருக்கு. அந்தப் போட்டோவ அனுப்பி விடுறீங்களா தோழி



உதைப்பதற்குள் ஓடிவிடு

**வட்சலா**

அதெப்படி திமிங்கலம், ஸ்கூல் பர்ஸ், காலேஜ் பர்ஸ்ட் பொண்ணுங்க தான் வராங்க ஆனா பெரிய பெரிய கண்டுபிடிப்பெல்லாம் ஆம்பளைங்கதான் கண்டுபிடிக்குறாங்க



இந்த பர்ஸ்ட் மார்க் எடுத்த பொண்ணுங்களெல்லாம் எங்கதான் போறாங்க

**நியாஸ்**

பெத்த புள்ளைக்கே இந்த கதின்னா கட்டுன புருஷன் உசுரோட இருப்பான்னு நினைக்கிறீங்க



அவன எங்க தொங்க விட்டுட்டு வந்தாளோ மகராசி


**கந்தன்**

எனக்கு இட்லியைப் பிடிக்காது தோசையைத்தான் பிடிக்கும்.



அது ஏன்னா இட்லி கூட்டமா வேகும் தோசை சிங்கிளாகத்தான் வேகும்.

**சுராங்கா**




**நித்தியா**



கணவன்- நீ சாப்பாடு போடாம இப்படியே சீரியல் பார்த்துட்டு இருந்தனா நான் தூக்குல தொங்கிடுவேன்.

மனைவி- அப்படிஒரமா போய் தொங்குங்க. டி.வி மறைக்குதுல

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் திறன் வகுப்பறை திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் நூற்றாண்டையொட்டிப் புதிதாக அமைக்கப்பட்ட திறன் வகுப்பறையை கலாசாலையில் 1952 - 1953 காலப்பகுதியில் பயிற்சி பெற்ற காரைநகர் சுந்தரமூர்த்தி வித்தியாலய முன்னாள் ஆசிரியை பராசக்தி கந்தையா கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார். அமெரிக்காவைத் தளமாகக் கொண்ட தொண்டு நிறுவனமாகிய ஐஎம்எச்ஓ மற்றும் பிரித்தானியாவைத் தளமாகக் கொண்ட ரட்ணம் பவுண்டேசன் என்பவற்றின் அனுசரணையில் திறன் பலகையும் அதற்குரிய மடிக்கணினியும் வழங்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

கலாசாலை அதிபர் ச.லலீசன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் இசுருபாய கல்வி அமைச்சின் தேசிய கல்வியியல் கல்லூரிகளுக்கான பணிப்பாளர் களனி ஹேமாலி கல்வி அமைச்சின் செயற்றிட்ட பணிப்பாளர் காரைக்கவி கந்தையா பத்மானந்தன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டனர்.

தனது தொண்ணூற்றைந்தாவது வயதிலும் தான் கற்ற கலாசாலை மீதான பற்றுடன் நிகழ்வில் ஆர்வத்துடன் கலந்து கொண்டதோடு திறன் பலகையில் எழுதியும் ஆசிரிய, மாணவர்கள் மத்தியில் தனது பயிற்சிக் கால அனுபவங்களை அரை மணி நேர உரையாக வழங்கியும் சிறப்பித்த மூத்த ஆசிரியர் பராசக்தியைப் பலரும் பாராட்டினர். (நி-33)

# ஹயஸ்- மோ.சைக்கிள் மோதி விபத்து

## குடும்பஸ்தர் படுகாயம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மட்டுவில் பகுதியில் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வீதியோரம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஹயஸ் வாகனத்துடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த விபத்து சம்பவித்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதில் மட்டுவில் பகுதியைச் சேர்ந்த 42 வயதான குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதன வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (நி-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 200 | 200 | 240 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 180 | 220 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 400 | 400 |
| தக்காளி | 250 | 250 | 250 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 220 | 240 | 220 | 250 |
| கோவா | 200 | 250 | 250 | 300 |
| கரட் | 400 | 500 | 500 | 600 |
| பூசணி | 120 | 120 | 120 | 120 |
| புடோல் | 80 | 60 | 100 | 160 |
| வாழைக்காய் | 180 | 200 | 120 | 150 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 160 | 140 | 160 | 160 |
| பாகற்காய் | 300 | 450 | 400 | 500 |
| வெண்டக்காய் | 80 | 100 | 100 | 300 |
| கருணைக் கிழங்கு | 120 | 180 | 160 | 200 |
| பயற்றங்காய் | 300 | 250 | 320 | 400 |
| லீக்ஸ் | 250 | 200 | 250 | 300 |
| பீற்றூட் | 120 | 180 | 150 | 200 |
| கறிமிளகாய் | 350 | 400 | 320 | 400 |
| முருங்கைக்காய் | 300 | 200 | 340 | 200 |
| போஞ்சி | 450 | 500 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 180 | 120 | --- | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 80 | 120 |
| தேசிக்காய் | 450 | 400 | 350 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 75 | 60-80 |
| இராசவள்ளி | 300 | 250 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 150 | 200 | 250 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 40 | 40 | 60 |
| ஈரப்பலா | 80 | 180 | 100 | 120 |

# பரிசில் தின விழா

(யாழ்ப்பாணம்)

யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் பரிசில் தின விழா-2022 நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு சிவயோக சுவாமிகள் மண்டபத்தில் பாடசாலையின் அதிபர் க.தவகீஸ்வரன் தலைமையில் இடம்பெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் பொ. ரவிச்சந்திரன் கலந்து சிறப்பிப்பார். (நி)

# புதிய நிர்வாகத் தெரிவு

(அராலி)

தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்ட இளைஞர் அணி புதிய நிர்வாகத் தெரிவு நேற்று இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட தமிழரசுக் கட்சி அலுவலகத்தில் குறித்த நிகழ்வு நடைபெற்றது. இவ் நிர்வாகத் தெரிவில் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர். வடக்கு மாகாண முன்னாள் கல்வி அமைச்சர் குருகுலராஜா உள்ளிட்ட 100இற்கு மேற்பட்ட இளைஞர்கள் கலந்து கொண்டனர்.(நி-104)


# 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்.

**சோமசுந்தரம் லோகாம்பிகை**

மலர்வு 27 - 08 - 1936

உதிர்வு 15 - 07 - 2023



முல்லைத்தீவு கல்வி வலயத்தின் ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையத்தின் விரிவுரையாளர் திரு.சோ.கோகுலன் அவர்களின் பாசமிகு தாயார் அமரர்.சோமசுந்தரம்-லோகாம்பிகை அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை பிரார்த்திப்போம்

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!!!

(6708)

ஊழியர் நலன்புரிச் சங்கம், வலயக் கல்வி அலுவலகம், முல்லைத்தீவு.


# இராசிபலன்

14.08.2023
ஆடி 29, திங்கட்கிழமை
திரியோதசி முற்பகல் 11.53 மணிவரை
புனர்பூசம் பிற்பகல் 01.20மணிவரை

சுபநேரம்-12.05-01.35 மணிவரை
இராகுகாலம்-7.35-09.05 மணிவரை
அமிர்தசித்தம்

சந்திராஷ்டமம்- கேட்டை, மூலம்.

வளவன்

**மேஷம்** சுபகாரியங்களில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்,சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்** விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**துலாம்** குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காண்பீர்கள், மகத்தான வாய்ப்புகள் இல்லம் வந்து சேரலாம், பிரியமான சிலரின் சந்திப்பு இடம்பெறலாம், போசன நன்மையுண்டு.

**மகரம்** நண்பர்களின் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வீர்கள், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும்.

**ரிஷபம்** தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் மேலோங்கும், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், பொதுவாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும் வாய்ப்புண்டு.

**சிம்மம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் எண்ணம் உருவாகும், மற்றவர்களை குற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்மந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**கும்பம்** கடன் பிரச்சினைகளை சாமர்த்தியமாகச் சமாளிப்பீர்கள், குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும்.

**மிதுனம்** வழிபாடு காரிய வெற்றி தரும், தொழிலில் அதிகாரிகளின் பாராட்டுகளை பெறுவீர்கள், சேமிப்பை அதிகரிக்கும் எண்ணம் மேலோங்கும் நாள்,

**கன்னி** தொழிலில் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பயணங்கள் கைகூடும், குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறும், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** மறதியால் சில தொல்லைகளிற்கு ஆட்படநேரிடலாம், தொழில் போட்டிகள் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, எதையும் சிந்தித்துச் செயற்பட வேண்டிய நாள்.

**மீனம்** பிள்ளைகளின் கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தொலைபேசி வழியில் பொன்னான செய்தியொன்று வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

உடல்நலன் உள்ள ஏழை மனிதன் பாதி பணக்காரன்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கோதுமை மாவின் விலை அதிகரிக்கும் சாத்தியம்

(கொழும்பு)

இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மா சில நாட்களுக்கே போதுமானதாக உள்ளது.

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டு திணைக்களத்தினால் கடந்த 16 ஆம் திகதி முதல் கோதுமை மா இறக்குமதி முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதாக இறக்குமதியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இதன்படி இறக்குமதி செய்யப்பட்ட கோதுமை மாவின் கையிருப்பு தீர்ந்து வருவதால் கோதுமை மா இறக்குமதிக்கு அனுமதி வழங்குமாறு அரசாங்கத்திடம் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். எனினும் அரசாங்கத்திடமிருந்து இதுவரை நல்ல பதில் கிடைக்கவில்லை.

இதன் காரணமாக எதிர்காலத்தில் கோதுமை மாவின் விலை அதிகரிக்கும் எனவும் தெரிவித்தனர். (நி)

# வாகனங்களுக்கான இறக்குமதி கட்டுப்பாட்டில் தளர்வு

## நிதி இராஜாங்க அமைச்சர் சியம்பலாப்பிட்டிய

(கொழும்பு)

தெரிவு செய்யப்பட்ட சில வாகனங்களுக்கான இறக்குமதிக் கட்டுப்பாடுகள் இந்த வாரத்துக்குள் தளர்த்தப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அதற்கான வர்த்தமானி அறிவிப்பு இந்த வாரத்துக்குள் வெளியிடப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்தார். (4)

# 543 கோடி ரூபாவை நாளாந்தம் கடனாகப் பெறும் அரசாங்கம்

## நிதி அமைச்சு தகவல்

(கொழும்பு)

அரசாங்கம் தனது பணிகளை நாளாந்தம் செயற்படுத்துவதற்கு 543 கோடி ரூபாவை கடனாகப் பெற வேண்டியுள்ளதாக நிதி அமைச்சின் அறிக்கைகள் தெரிவிக்கின்றதாக பேராதனை பல்கலைக்கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளியியல் கற்கைகள் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இவ்வருடத்தின் முதல் ஐந்து மாதங்களில் அரசாங்கத்தின் சராசரி நாளாந்தச் செலவு 1425 கோடி ரூபாவாகும் எனவும் இதனால் அரசாங்கம் தனது அனைத்துச் செலவுகளையும் ஈடுகட்ட நாளொன்றுக்கு கிட்டத்தட்ட 677 கோடி ரூபாவை கடனாகப் பெற வேண்டியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி)

# கார்-பௌசர் நேருக்கு நேர் மோதி விபத்து- ஐவர் காயம்

(ஹற்றன்)

எரிபொருள் ஏற்றிச் சென்ற பௌசரும் காரொன்றும் நேருக்கு நேர் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் காரில் பயணித்த ஐவர் படுகாயமடைந்துள்ளனர் என்று திம்புள்ள - பத்தன பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் கொட்டகலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக கிளாங்கள் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர். ஹற்றன் - நுவரெலியா பிரதான வீதியில் திம்புள்ள - பத்தனை சந்தியில் வைத்தே நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது. கார் வேகமாக செலுத்தப்பட்டுள்ளது எனவும் அதன் சாரதி மதுபோதையில் இருந்துள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்தில் காயமடைந்த ஐவரும் நோர்வூட் பகுதியைச் சேர்ந்த 20-30 வயதுக்கிடைப்பட்டவர்கள் என விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துவரும் திம்புள்ள பத்தன பொலிஸார் தெரிவித்தனர். (நி)

# ஓவியர் ஆசை ராசையா நினைவாக கலை நிகழ்வுகளும் கண்காட்சியும்

(அராலி)

ஓவியர் ஆசை இராசையாவின் 77ஆவது ஜனன தினத்தை முன்னிட்டு "பிரம்மம்" என்ற தலைப்பிலான நினைவு கூரல் நிகழ்வு மற்றும் ஓவியக் கண்காட்சி என்பன எதிர்வரும் 19 ஆம் திகதி சனிக்கிழமையும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமையும் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நடைபெறவுள்ளது.

சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக நுண்கலைத் துறைப் பேராசிரியர் தா. சனாதனன் தலைமையில் நடைபெறும் அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம விருந்தினராக கொழும்பு கட்புலக் கலைகள் மற்றும் நிகழ்த்து கலைகள் பல்கலைக்கழகப் பேராசிரியர் சந்திரகுப்த தேனுவர கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பேராசிரியர் சரத்சந்திர ஜீவாவால் வடிவமைக்கப்பட்ட ஓவியர் ஆசை இராசையாவின் உருவச்சிலையும் வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டு திரை நீக்கம் செய்து படுத்தப்பட உள்ளது. (நி)

# 13 ஆவது திருத்தச்சட்டத்தை அமுல்படுத்த இடமளிக்க முடியாது- கம்மன்பில விடாப்பிடி

(கொழும்பு)

**13 ஆவது திருத்த சட்டத்தை அமுல்படுத்த இடமளிக்க முடியாது என்றும் இதற்கு எதிராக தென் இலங்கையில் எதிர்ப்பை ஒன்றிணைப்போம் என்றும் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

13 பிளஸ் என்ற நோக்கத்துடன் செயற்பட்டதாலேயே மகிந்த ராஜபக்ஷ கடந்த 2015 ஆம் ஆண்டு மக்களால் புறக்கணிக்கப்பட்டார் என்றும் பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் 13 அமுல்படுத்த ஜனாதிபதி எடுக்கும் முயற்சிகள் ஒருபோதும் வெற்றி பெறாது என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் சனிக் கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பேசிய உதய கம்மன்பில, அரசியலமைப்பின் ஒரு திருத்தமாக காணப்படும் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்த புதிதாக சட்டதிருத்தங்களை மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏதும் கிடையாது என்றும் 13 பிளஸ் அமுல்படுத்த ஜனாதிபதி முயற்சிக்கிறார் என்றும் குற்றம்சாட்டியுள்ளார்.

இதே வேளை விகிதாசார தேர்தல் முறைமையை இரத்து செய்ய முற்பட்டால் வடக்கு மற்றும்கிழக்கில் உள்ள சிறுபான்மை சிங்களவர்கள் உள்ளூராட்சிசபைகளுக்கான பிரதிநிதித்துவத்தில் பாதிக்கப்படுவார்கள் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.



வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழர்கள், முஸ்லிம்கள் குறித்து கவனம் செலுத்தும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிங்களவர்களை இரண்டாம் பட்சமாக்கியுள்ளார் என்றும் அவர் குற்றம்சாட்டினார். (நி)

# மசகு எண்ணெய் உற்பத்தியில் வீழ்ச்சி

(கொழும்பு)

கடந்த மாதம் முதல் ஒபெக் அமைப்பு தமது நாளாந்த உற்பத்தியை 1.2 மில்லியன் பீப்பாய்களால் குறைக்க நடவடிக்கை எடுத்ததால் மசகு எண்ணெய் உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த தீர்மானத்தை அடுத்து கடந்த இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், உலக மசகு எண்ணெய் உற்பத்தி பாரிய அளவில் வீழ்ச்சியடைந்துள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சவுதி அரேபியாவும் ஒரு மில்லியன் பீப்பாய்களால் தமது உற்பத்தியை குறைக்கத் தொடங்கியுள்ளது.

இந்தநிலையில், தற்போது உலக சந்தையில் மசகு எண்ணெய் விலை 86 அமெரிக்க டொலராக உள்ளது.

பிரெண்ட் ரக மசகு எண்ணெய் விலை நேற்று 87 அமெரிக்க டொலரை அண்மித்திருந்ததாக சந்தை தரவுகள் தெரிவிக்கின்றன. (நி)

# மீண்டும் நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்த ஜே.வி.பி சதி -ரணில்

(கொழும்பு)

நாட்டில் அமைதியின்மையை ஏற்படுத்தி பொதுமக்களை வன்முறையாளர்களாக்கி ஆட்சி கவிழ்ப்பு சதியில் மக்கள் விடுதலை முன்னணி தலைமையிலான குழு ஈடுபட்டுள்ளது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஆளும் கட்சி கூட்டத்தில் இதனை தெரிவித்துள்ள ஜனாதிபதி, ஆட்சிக்கவிழ்ப்பு சதி தொடர்பான புலனாய்வு அறிக்கை மற்றும் வீடியோ ஆதாரங்களையும் வெளியிட்ட அதேவேளை இந்த விடயம் குறித்து நடவடிக்கை எடுக்க பாராளுமன்ற தெரிவுக் குழுவை ஸ்தாபிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த ஆண்டை போன்று மக்களை வன்முறையாளர்களாக்கி வீதியில் இறக்கி அரச எதிர்ப்பு போராட்டங்களை முன்னெடுக்கும் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடுமையான பொருளாதார நெருக்கடிகளிலிருந்து நாடு ஒருநிலைக்கு வந்துள்ளது. மறுசீரமைப்பு நடவடிக்கைகள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வரும் அதேநேரம் மக்களின் முழுமையான ஒத்துழைப்பும் அதற்கு கிடைத்துள்ளதாக ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார்.

வறட்சியை காரணம் காட்டி மக்களை வன்முறைக்குள் தள்ளுவதற்கு இடமளிக்க முடியாது. விவசாயத்திற்கு தேவையான நீரை பெற்றுக் கொடுக்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (நி)

# தனியார் துறையிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்யத் தீர்மானம்

## மேலும் நெருக்கடிக்குள் அரசாங்கம்

(கொழும்பு)

அரசாங்கம் தனியார் துறையிடமிருந்து மின்சாரத்தை கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ளது.

தொடரும் வரட்சியான காலநிலை அரசாங்கத்திற்கு மேலும் நெருக்கடியான சூழ்நிலையை உருவாக்கியுள்ளது. அரசாங்கம் அவசரமாக மின்சாரத்தை தனியார் துறையினரிடமிருந்து கொள்வனவு செய்ய தீர்மானித்துள்ள அதேவேளை வரட்சியால் பாதிக்கப்பட்டுள்ள ஆயிரக்கணக்கான விவசாயிகளுக்கு நட்டஈடு வழங்கவும் தீர்மானித்துள்ளது.

தனியார் துறையினரிடமிருந்து அவசர மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை இந்த வாரம் அனுமதியளித்துள்ளது.

ஆறு மாத காலத்திற்கு நாளாந்தம் 100 மெகாவாட் மின்சாரத்தை கொள்வனவு செய்வதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அடுத்த மாதம் இதற்கான நடவடிக்கைகள் ஆரம்பமாக உள்ளன. இதேவேளை நீர் மின்சார உற்பத்தி பாதிக்கப்படுவதால் தேவை அதிகரிக்கும் என தெரிவித்துள்ள இலங்கை மின்சாரசபை நாளாந்தம் 150 மெகாவாட் மின்சாரத்தை கொள்வனவு செய்ய வேண்டியிருக்கும் என தெரிவித்துள்ளது.

நீர்மின் உற்பத்தியில் வீழ்ச்சியடைந்துள்ளதுடன் நுரைச்சோலை மின்நிலையத்தின் ஒரு பிரிவு தொழில்நுட்ப பாதிப்புகளை எதிர்கொண்டுள்ளது.

இதேவேளை வரட்சியினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீட்டை வழங்குவது தொடர்பில் அமைச்சரவை பத்திரத்தை சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடவளவ நீர் 3 நாட்களுக்கு மாத்திரமே போதுமானது

## மகாவலி அதிகார சபை

(கொழும்பு)

உடவளவ நீர்த்தேக்கத்தின் நீர் கொள்ளளவு 3 நாட்களுக்கு மாத்திரமே போதுமானதென இலங்கை மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது.

தற்போது சுமார் 5000 ஏக்கர் அடி நீர் கொள்ளளவு மாத்திரமே காணப்படுவதாக அதிகார சபை குறிப்பிட்டுள்ளது.

சமனல வாவியிலிருந்து உடவளவ நீர்த்தேக்கத்திற்கு நேற்று முன்தினம் 2300 ஏக்கர் அடி நீர் திறந்து விடப்பட்டுள்ளது என இலங்கை மகாவலி அதிகார சபை தெரிவித்துள்ளது. (நி)

# உலக அதிசயங்களில் ஒன்றான

## ஈபிள் கோபுரம் மீது வெடிகுண்டு அச்சுறுத்தல்

## சுற்றிவளைத்த பொலிஸார்

(பாரிஸ்)

உலக அதிசயங்களில் ஒன்றான பிரான்ஸ் ஈபிள் கோபுரத்தின் மீது வெடிகுண்டு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இதையடுத்து அங்கு கூடியிருந்த பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகள் உடனடியாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பொலிஸார் குவிக்கப்பட்டு, கோபுரத்தினை சுற்றி பாதுகாப்பு வளையம் அமைத்து தீவிர சோதனை நடத்தி வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி)



# ஹவாய் காட்டுத்தீ; உயிரிழப்புகள் 89 ஆக அதிகரிப்பு

(வோஷிங்டன்)

ஹவாய் காட்டுதீ காரணமாக மரணித்தவர்களின் எண்ணிக்கை 89 ஆக அதிகரித்துள்ளதாக ஆளுநர் ஜொஸ் கிறீன் உறுதிப்படுத்தியுள்ளார்.

இரண்டாயிரத்திற்கும் அதிகமான வீடுகள் முற்றாக அழிந்து போய் உள்ளதுடன் மேலும் அதிகமான கட்டடங்கள் சேதமடைந்துள்ளன.

இது தவிர, ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் குறித்து எந்த விதமான தகவல்களும் பெற முடியாமல் உள்ளதாக அவர் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளார்.

இந்த நிலையில் உயிர்ச்சேத எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என கவலை வெளியிடப்பட்டுள்ளது. (நி)

# பாகிஸ்தானின் இடைக்கால பிரதமராக உல் ஹக் ககர் நியமனம்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் பாராளுமன்றம் கலைக்கப்பட்டுள்ள நிலையில் தற்காலிக பிரதமராக பலுசிஸ்தான் எம்.பி. அன்வர் உல் ஹக் ககர் நியமிக்கப்பட்டுள்ளார். பிரதமர் பதவியில் இருந்து விலகும் ஷெபாஸ் ஷெரீப் மற்றும் எதிர்க்கட்சி தலைவர் ராஜா ரைஸ் அகமது இணைந்து தற்காலிக பிரதமராக அன்வர் உல் ஹக் ககரை நியமித் துள்ளனர். அடுத்த பிரதமர் தேர்வு செய்யப்படும் வரை அன்வர் தற்காலிக பிரதமராக செயற்படுவார் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தற்காலிக பிரதமர் நியமனத்திற்கு பாகிஸ்தான் ஜனாதிபதி ஒப்புதல் அளித்துள்ளார். (நி)


# நீங்காத நினைவு தினங்கள்-2023

21 ம் ஆண்டு




பிறப்பு -1921.02.09
இறப்பு-14.10.2000
அமரர்.த.அருளானந்தம்
RTD Store Keeper

33 ம் ஆண்டு




பிறப்பு -1927.02.09
இறப்பு-1990.08.14
அமரர்.திருமதி.நவமணி அருளானந்தம்

38 ம் ஆண்டு



பிறப்பு -1918.07.07
இறப்பு-1985.06.23
அமரர்.செல்வி.ராசமணி சொலோமோன்

3 ம் ஆண்டு



பிறப்பு -1959.08.06
இறப்பு-2020.03.15
அமரர்.அருளானந்தம் பேனாட்

2 ம் ஆண்டு



பிறப்பு -1951.08.09
இறப்பு-2021.09.09
அமரர்.திருமதி.டெய்சி பற்றிமா மனோகரன் B.com J.P
RTD,Teacher wesley college colombo-09

2 ம் ஆண்டு



பிறப்பு -1991.07.09
இறப்பு-2021.06.22
அமரர்.செல்வி.நிரோஷி எட்வேட்

" உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே, என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"

தகவல்– குடும்பத்தினர்,உற்றார்,உறவினர்.

(16706)

"Daisy Kudil"
104/18 A sangamita mw,
KOTAHENA,
Colombo-13
SRILANKA.

"Navamai Sollai"
60/1A, Solomans Lane,
old park Road,
CHUNDIKULI,
Jaffna,Srilanka.

PLOT NO 1 Amman
NAGAR,Reittaivakkal
THIRUMALLAI
TRICHY-6201025
INDIA.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 255





அடுத்த பட்டம் யாருக்கு என்பதைப் பற்றிச் சந்தேகம் எதுவும் இருக்கக் கூடாது என்றுதான் என் தந்தையும் பாட்டியும் மற்ற பெரியோர்களும் சேர்ந்து அந்த ஏற்பாடு செய்தார்கள். மதுராந்தகனுக்கு யாராவது துர்ப்போதனை செய்து தூபம் போட்டு விடப் போகிறார்கள் என்ற பயம் அவர்களுக்கு இருந்ததோ என்னமோ? இளவரசுப் பட்டம் கட்டியதோடு, பரகேசரிப் பட்டம் அளித்து என் பெயராலேயே கல்வெட்டு சாசனம் ஏற்படுத்தும் உரிமையையும் அளித்தார்கள். 'இனி இச்சோழ சாம்ராஜ்யத்தை ஆளும் பொறுப்பு முழுதும் உனக்கே' என்று என் அருமைத் தந்தை மனதார, வாயாரக் கூறினார். அதை நாட்டார், நகரத்தார், அமைச்சர்கள், தளபதிகள் அனைவரும் ஒப்புக் கொண்டு ஜயகோஷம் செய்தார்கள். இந்தக் கோலாகலத்தில் நான் நந்தினியை அடியோடு மறந்திருந்தேன். ஆனால் பட்டாபிஷேகச் சடங்கு நடந்து முடிந்த சிறிது நேரத்துக்கெல்லாம் அவளை நான் என்றும் மறக்க முடியாத சம்பவம் நேர்ந்தது.

"பழைமையான சோழர் குலத்து மணிமகுடத்துடன் என்னைச் சக்கரவர்த்தி அந்தப்புரத்துக்கு அழைத்துப் போனார். என் அன்னையிடமும் பாட்டியிடமும் மற்ற அந்தப்புர மாதரிடமும் ஆசி பெறுவதற்காக அழைத்துப் போனார். என்னைத் தொடர்ந்து என் சகோதரனும் முதன் மந்திரியும் பழுவேட்டரையர்களும் வந்தார்கள். அந்தப்புரத்தில் வயது மிகுந்த தாய்மார்களோடு, என் தங்கையும் அவளுடைய தோழிகளும் மற்றும் பல இளமங்கையரும் கூட்டமாக நின்றார்கள். எல்லாரும் ஆடை ஆபரணங்களினால் ஜொலித்துக் கொண்டு மகிழ்ச்சியினால் மலர்ந்த முகங்களோடு எங்கள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டு நின்றார்கள். ஆனால் அத்தனை முகங்களிலும் ஒரே ஒரு முகந்தான் என் கண்ணுக்குத் தெரிந்தது. அது நந்தினியின் முகந்தான். எரிந்து சாம்பராய்ப் போனாள் என்று நான் எண்ணியிருந்த என் இதய தேவதை தான் அவள்! அந்த அரண்மனை அந்தப்புரத்துக்குள் அவள் எப்படி வந்தாள்? அவ்வளவு பிரமாதமான ஆடை அலங்காரங்களுடன் ராணிகளுக்குள் நடுநாயகமான மகாராணியாக அங்கே எப்படி நிற்கிறாள்? அவள் முகத்தில் தான் என்ன மந்தகாஸம்? அவளுடைய சௌந்தரியம் முன்னைக் காட்டிலும் பத்து மடங்கு அதிகமாயிருப்பது எப்படி? சில கண நேரத்திற்குள் என் உள்ளம் பற்பல ஆகாசக் கோட்டைகளைக் கட்டிவிட்டது! சோழ சாம்ராஜ்யத்திற்கு உரியவன் என்று நான் முடிசூட்டிக் கொண்ட அன்றைய தினம் உண்மையிலேயே என் வாழ்நாளில் அதிர்ஷ்ட தினம் ஆகப் போகிறதா? என் உள்ளத்தைக் கவர்ந்த ராணியை என் பட்ட மகிஷியாகவும் அடையப் போகிறேனா? ஏதோ, ஓர் அதிசயமான இந்திர ஜாலத்தினால், மந்திர சக்தியினால், அவ்விதம் நடக்கப் போகிறதா? இப்படி நான் எண்ணிக் கொண்டிருக்கையில் என் அன்னை வானமாதேவி முன்னால் இரண்டு அடி நடந்து வந்து 'குழந்தாய்!' என்று சொல்லி என்னை ஆசீர்வதித்து உச்சி மோந்தாள்! அதே சமயத்தில் யாரும் எதிர்பாராத அச்சம்பவம் நடந்து விட்டது. என் தந்தை 'ஆ!' என்று ஒரு கூச்சலிட்டு விட்டுத் திடீரென்று தரையில் சுருண்டு விழுந்து மூர்ச்சை அடைந்தார். உடனே, அவ்விடத்தில் பெருங் குழப்பமாகிவிட்டது. நானும் மற்ற எல்லாரும் சக்கரவர்த்தியைத் தூக்கி உட்கார வைத்து மூர்ச்சை தெளிவிப்பதில் கவனம் செலுத்தினோம். என் அன்னையையும், பாட்டி செம்பியன் மாதேவியையும் தவிர மற்ற மாதர் அனைவரும் உள்ளே சென்று விட்டார்கள். தந்தைக்குச் சீக்கிரத்தில் மூர்ச்சை தெளிந்து விட்டது.

"என் சகோதரி குந்தவையைத் தனி இடத்துக்கு நான் அழைத்துச் சென்று, 'நந்தினி அங்கே எப்படி வந்தாள்?' என்று கேட்டேன்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## இரண்டு புலிக்கு எங்கே போவேன்?



இனி இங்கே இருப்பது நல்லதல்ல, எங்காவது ஓடிவிடுவோம், என்று நினைத்தது .அது ஒரே பாய்ச்சலாக அங்கிருந்து ஓட்டம் பிடித்தது அது. தன் திட்டம் வெற்றி பெற்றதை எண்ணி மகிழ்ந்தாள் அவள்.

பயந்து ஓடும் புலியை வழியில் சந்தித்தது நரி. காட்டுக்கு அரசே! ஏன் இப்படி அஞ்சி ஓடுகிறீர்கள்? உங்களை விட வலிமை வாய்ந்தது சிங்கம் தான். நம் காட்டில் சிங்கம் ஏதும் இல்லை. என்ன நடந்தது? சொல்லுங்கள், என்று கேட்டது அது.

நரியே! நம் காட்டுக்கு ஒரு அரக்கி வந்துள்ளாள். இரண்டு குழந்தைகள் அவளிடம் உள்ளன. அந்தக் குழந்தைகள் உண்ண நாள்தோறும் ஆளுக்கொரு புலியைத் தருகிறாளாம். இப்படி அவளே சொல்வதை என் காதால் கேட்டேன். அதனால் தான் உயிருக்குப் பயந்து ஓட்டம் பிடித்தேன், என்றது புலி.

இதைக் கேட்ட நரியால் சிரிப்பை அடக்க முடியவில்லை. புலியாரே! கேவலம் ஒரு பெண்ணிற்குப் பயந்தா ஓடுகிறீர்? அவள் உங்களை ஏமாற்றி இருக்கிறாள். எங்காவது மனிதக் குழந்தைகள் புலியைத் தின்னுமா? வாருங்கள். நாம் அங்கே செல்வோம். அவளையும் குழந்தைகளையும் கொன்று தின்போம், என்றது அது.

அந்தக் குழந்தைகளின் கத்தலை நீ கேட்டிருந்தால் இப்படிப் பேசமாட்டாய். அந்த அரக்கியின் குரல் இன்னும் என் காதில் கேட்கிறது. நான் அங்கு வர மாட்டேன், என்று உறுதியுடன் சொன்னது புலி.

அவள் சாதாரண பெண் தான். உங்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். அதற்காக உங்கள் வாலையும் என் வாலையும் சேர்த்து முடிச்சுப் போடுவோம். பிறகு இருவரும் அங்கே சென்று பார்ப்போம். உங்களுக்கு எந்த ஆபத்தும் வராது. நம் இருவர் பசியும் தீர்ந்துவிடும், என்றது நரி. தயக்கத்துடன் ஒப்புக் கொண்டது புலி. இருவரின் வாலும் சேர்த்து இறுகக் கட்டப்பட்டன. நரி முன்னால் நடந்தது. புலி தயங்கித் தயங்கிப் பின்னால் வந்தது.

மரத்தில் இருந்த அவள் நரியும் புலியும் வருவதைப் பார்த்தாள். இரண்டின் வாலும் ஒன்றாகக் கட்டப்பட்டு இருந்தது. அவளின் கண்களுக்குத் தெரிந்தது. என்ன நடந்திருக்கும் என்பதை உணர்ந்தாள் அவள்.

கோபமான குரலில், நரியே! நான் உன்னிடம் என்ன சொன்னேன்? என் குழந்தைகள் பசியால் அழுகின்றன. ஆளுக்கொரு புலி வேண்டும் என்றேன். இரண்டு புலிகளை இழுத்து வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்றாய். இப்பொழுது ஒரே ஒரு புலியுடன் வருகிறாய். எங்களை ஏமாற்றவா நினைக்கிறாய்? புலியுடன் உன்னையும் கொன்று தின்கிறேன், என்று கத்தினாள்.

இதை கேட்ட புலி நடுங்கியது, இந்த நரிக்குத்தான் எவ்வளவு தந்திரம்? நம்மை ஏமாற்றித் தன் வாலோடு கட்டி இழுத்து வந்திருக்கிறதே. நாம் எப்படிப் பிழைப்பது? ஓட்டம் பிடிப்பது தான் ஒரே வழி, என்று நினைத்தது அது.

அவ்வளவுதான். வாலில் கட்டப்பட்டு இருந்த நரியை இழுத்துக் கொண்டு ஓடத் தொடங்கியது. நரியோ, புலியாரே! அவள் நம்மை ஏமாற்றுவதற்காக இப்படிப் பேசுகிறாள். ஓடாதீர்கள், என்று கத்தியது.

உன் சூழ்ச்சி எனக்குப் புரிந்துவிட்டது. என்னைக் கொல்லத் திட்டம் போட்டாய். இனி உன் பேச்சை கேட்டு ஏமாற மாட்டேன், என்று வேகமாக ஓடத் தொடங்கியது புலி.

வாலில் கட்டப்பட்டிருந்த நரி பாறை, மரம், முள்செடி போன்றவற்றில் மோதியது. படுகாயம் அடைந்தது அது. புலியோ எதைப் பற்றியும் சிந்திக்காமல் நரியை இழுத்துக் கொண்டு ஓடியது. வழியில் நரியின் வால் அறுந்தது. மயக்கம் அடைந்த நரி அங்கேயே விழுந்தது. புலி எங்கோ ஓடி மறைந்தது.

பிறகு அந்தப் பெண் தன் குழந்தைகளுடன் பாதுகாப்பாகக் கணவனின் ஊரை அடைந்தாள்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உலகிலேயே மிகப்பெரிய மனிதன் யார்? ஒரு வேர்க்கடலையை சாப்பிட்டுவிட்டு அத்துடன் நிறுத்திக் கொள்ளும் மனோபலம் உள்ளவன். ~ பாலக்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஆடி அமாவாசை விரதம் அனுஷ்டித்து பிதிர்களின் ஆசியை வேண்டுவோம்

நாளை 15ஆம் திகதி ஆடி அமாவாசை விரதம். ஆடி மாதத்தில் இம்முறை இரண்டு அமாவாசை விரத நாள் வந்ததன் காரணமாக சில குழப்பங்கள் ஏற்படவே செய்தன.

எனினும் மாதத்திலே இரண்டு திதிகள் வரும் பட்சத்தில் இரண்டாவது திதியைத் தேர்ந்தெடுப்பது என்ற கணிப்பீட்டின் பிரகாரம் நாளை ஆடி அமாவாசை விரதமாகிறது.

இதிலும் அமாவாசை விரதம் ஆரம்பிக்கின்ற நேரத்தில் சில குழப்பங்கள் இருக்கவே செய்கின்றன.

எதுவாயினும் நாளை 15ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆடி அமாவாசை விரத நாள் என்பதோடு அந்தக் குழப்பத்துக்கு முடிவு கட்டலாம்.

மாறாக, ஆடி அமாவாசை என்பது பிதிர்களுக்கு மோட்சம் வேண்டிப் பிரார்த்திக்கின்ற புண்ணிய விரத நாள்.

ஆம் இல்வாழ்க்கையில் இருப்பவர்களுக்கு வகுக்கப்பட்ட கடமைகளில் ஒன்று தென்புலத்தாரை நினைவேந்துவதாகும்.

அதாவது இறந்துபோன நம் முன்னவர்களுக்கு மோட்சம் கிடைக்கும்படியாகவும் ஸ்தூல வடிவில் பிதிர்களாக இருக்கக்கூடிய அவர்களுக்கு நிவேதனம் வழங்கி ஆத்மாக்களைச் சாந்தப்படுத்துவதும் கட்டாயமானதாகும்.

இதனைச் செய்யாதவிடத்து, இறந்துபோன நம் முன்னவர்கள் தம் குடும்ப உறுப்பினர்களுக்கு சாபம் வழங்குவர் எனவும் பிதிர்களின் சாபம் மிகப்பெரும் துன்பங்களைத் தரவல்லது எனவும் சாத்திர நூல்கள் உபதேசிக்கின்றன.

பொதுவில் குடும்பங்களில் ஏற்படக்கூடிய அகால மரணங்கள், துர் மரணங்கள் இவற்றுக்கு மூலகாரணம் பிதிர்களின் சாபம் என ஜீவமுத்தர்கள் கூறிவைத்துள்ளனர்.

இதை நாம் கூறும்போது சாத்திரங்கள் கூறுவதை நாங்கள் நம்பமாட்டோம். அவை அறிவுபூர்வமானவை அல்ல என்று யாரேனும் கூறினாலும் பரவாயில்லை. சாத்திர நூல்களுக்கு அஞ்சி பிதிர்க்கடன் செய்ய வேண்டாம்.

மாறாக எங்களோடு வாழ்ந்தவர்கள், எங்களை வாழ வைத்தவர்கள், அவர்கள் இல்லையேல் நாம் இல்லை என்ற மெய்யறிவின் அடிப்படையிலேனும் நம் முன்னவர்களுக்காக விரதம் இருந்து தர்ப்பணம் செய்து புனித நீர்நிலைகளில் நீராடி அவர்களின் பொருட்டு தான தர்மம் செய்து அவர்களை நினைவேந்தி அவர்கள் வீடு பேற்றை அடையும் பொருட்டு பிரார்த்தனை செய்ய வேண்டும்.

அந்தப் பிரார்த்தனை எங்களை ஆற்றுப்படுத்தும். ஆறுதலைத் தரும். தென்புலத்தாருக்குரிய கடமையைச் செய்தோம் என்ற மனநிறைவைத் தரும்.

ஆகையால் நாளை ஆடி அமாவாசை விரத நாளில் விரதம் அனுஷ்டித்து பிதிர்க்கடன் செய்து பிதிர்களின் ஆசியைப் பெற்று இன்புற்று வாழ்வோம்.

# ஏற்றுமதி வருமானத்தை மேம்படுத்த ஜனாதிபதி ரணில் நடவடிக்கை

இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழில் சார் ஏற்றுமதி மற்றும் மீள் ஏற்றுமதியை மேம்படுத்துவதன் மூலம் வருடாந்தம் அதிக ஏற்றுமதி வருமானத்தை ஈட்ட முடியும் என்பதால், அந்த இலக்கை அடைவதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகள் மற்றும் திட்டங்களை உடனடியாக சமர்ப்பிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் தொழில் துறை தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைகள் தொடர்பில் ஜனாதிபதி அலுவலகத்தில் அண்மையில் இடம்பெற்ற கலந்துரையாடலில் ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் அபிவிருத்திக்கான வரிக் கொள்கைகள் தொடர்பான பரிந்துரைகளும் சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான துறைசார் கண்காணிப்புக் குழுவினால் ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது.

இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையை பாதிக்கும் வரிகள் மற்றும் ஏற்றுமதி, மீள்ஏற்றுமதி செயன்முறைகள் தொடர்பில் இதன்போது விரிவாக கலந்துரையாடப்பட்டதுடன், இத்துறையில் இதுவரை ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பிலும் உரிய தரப்பினர் ஜனாதிபதியிடம் தகவல்களை முன்வைத்தனர்.

இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணத் துறையின் வருமானம் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இவ்வருடம் குறிப்பிடத்தக்க வளர்ச்சியை அடையவில்லை என்றும், வருடாந்தம் குறைந்தது 2 பில்லியன் அமெரிக்க டொலர்களை இலக்காகக் கொள்ள திட்டமிடப்பட்ட வேலைத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும் ஜனாதிபதி வலியுறுத்தினார்.

இலங்கையில் இரத்தினக்கல் மற்றும் ஆபரண தொழிலை மேம்படுத்துவதற்கான முறையான வேலைத்திட்டம் உடனடியாக முன்வைக்கப்பட்டால் தேவையான வசதிகளை வழங்க அரசாங்கம் தயாராக இருப்பதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் குறிப்பிட்டார். (4-7)

## கோம்பயன் மணல் மயானத்தில் மருத்துவக் கழிவுகளை எரிக்க விரைவில் எரியூட்டி

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் மூன்று மாதங்களில் கோம்பயன் மணல் மயானத்தில் மருத்துவக் கழிவுகளை எரிப்பதற்கான எரியூட்டி செயல்படுத்தப்படும் என வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், வைத்தியர் த.சத்தியமூர்த்தி நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

கோம்பயன் மணல் மயானத்தில் எரியூட்டி அமைப்பதற்காக யாழ். மாநகர சபையோடு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு, உரிய காணிப்பகுதி தெரிவு செய்யப்பட்டிருக்கிறது. குறித்த காணிப் பகுதி சீரமைக்கப்பட்டு மதில் சுவர் பகுதி அமைக்கப்பட்டு எரியூட்டி இயந்திரம் பொருத்தப்படவிருக்கிறது. ஆகவே, அது எதிர்வரும் மூன்று மாதங்களில் செயல்படுத்தப்படும் என நம்புகின்றேன்.

அதற்கு முன்னதாக தெல்லிப்பழை மற்றும் ஏனைய வைத்தியசாலைகளிலும் எரியூட்டிகள் செயல்படும் இடங்களில் மருத்துவக் கழிவுகள் எரிக்கப்படுகின்றன. மருத்துவக் கழிவுகள் அளவுக்கு அதிகமாகின்றபோது தெற்குப் பகுதிகளில் இருக்கின்ற தனியார் எரியூட்டிகளுக்கு அனுப்பி வைக்கப்படும், எனவும் அவர் தெரிவித்துள்ளார். (4,7)

## மூன்றாண்டுகளின் பின் 202 சதவீதத்தால் வளர்ச்சி கண்டது சுற்றுலாத்துறை

(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கை கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் ஒரு லட்சத்து 43 ஆயிரத்து முப்பத்து ஒன்பது ஆக காணப்பட்டுள்ளது.

மூன்று வருடங்களுக்குப் பின்னர், அதிக எண்ணிக்கையிலான பயணிகள் ஜூலை மாதத்தில் வருகை தந்துள்ளனர்.

இது கடந்த வருடம் இதே காலப்பகுதியில் வருகை தந்த பயணிகளை விட 202 சத வீத அதிகரிப்பாகுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடம் ஜனவரி முதல் ஜூலை மாதம் வரையிலான காலப்பகுதியில் 7 லட்சத்து 67 ஆயிரத்து 913 பேர் வருகை தந்துள்ளனர்.

அதேவேளை, இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் சராசரியாக நாளாந்தம் 180 அமெரிக்க டொலர்களை செலவிடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் எதிர்வரும் 2029 ஆம் ஆண்டளவில் நாளாந்தம் சராசரியாக 500 அமெரிக்க டொலர்களை செலவிடுவர் என எதிர்பார்ப்பதாக சுற்றுலாத்துறை அமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன. (4,7)

## விண்கல் மழையை காண அரிய சந்தர்ப்பம்

### வானியலாளர் கிஹான் வீரசேகர

(கொழும்பு)

இலங்கையில் இந்நாட்களில் கண்கவர் விண்கல் மழையை காண முடியும் என வானியலாளர் கிஹான் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அதிகாலை வேளையில் இந்த விண்கல் மழையை காண முடியும் எனவும் இது பெர்சீட்ஸ் விண்கல் மழை என அழைக்கப்படுவதாக கிஹான் வீரசேகர சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விண்கற்களை அதிகாலை 01 மணி முதல் காண முடியும் என சுட்டிக்காட்டியுள்ள அவர், அடிவானத்தில் இருந்து எழும் விண்கற்கள் மெதுவாக மேல் வானத்தை நோக்கி வருவதாகவும் தெரிவித்துள்ளார். (4,7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில் ஒமினி அலுமினியம்** தொழிற்சாலை -கரந்தன், அரசகேசரிப்பிள்ளையார் கோவிலடி - நீர்வேலி, கரந்தன், மாலை வைரவர் கோவிலடி, போயிட்டி, பொக்கணை,ஊரெழு அம்மன் கோயில், கே .எம். கே கடலுணவு (பிறைவேட்) லிமிற்றெட், காளி கோவிலடி -மூளாய், மூளாய் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## உரிய ஆய்வுகள் இன்றி சந்தையில் தேங்காய் எண்ணெய்

உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் தேங்காய் எண்ணெய் முறையான ஆய்வுகள் இன்றி சந்தைக்கு வெளியிடப்படுவதாக நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அமைப்பு குற்றம் சுமத்தியுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான தேசிய அமைப்பின் தலைவர் ரஞ்சித் விதானகே இதனை தெரிவித்துள்ளார்.

மேலும், நுகர்வோர் சட்டத்திற்கு ஏற்ப வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்காவிட்டால், எதிர்காலத்தில் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்து, விலையை காட்சிப்படுத்தாத கடை உரிமையாளர்களை நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள் எச்சரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4,7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு

05

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



பல வருடங்களாக இலங்கையின் வருமானத்தில் சுற்றுலாத்துறையின் வருமானமே பிரதான பங்களிப்பாக இருந்துள்ளது. ஆனால் கடந்த இரு ஆண்டுகளாக சுற்றுலாத் துறையின் அந்நியச் செலாவணி வருவாய் மற்றும் வேலைவாய்ப்பு நிலை ஆகியவற்றில் பெரிய சரிவு காணப்பட்டது.

இலங்கைச் சுற்றுலா துறையில் முதலாவதாக, ஏப்ரல் 2019 இல் தற்கொலை குண்டுதாரிகளின் ஈஸ்டர் பயங்கரவாதத் தாக்குதல் பெரும் பின்னடைவை ஏற்படுத்தியது. கொவிட்-19 தொற்று நோய் 2020 இல் வெடித்ததில் இரண்டாவது பேரழிவை ஏற்படுத்தியது. இவை இரண்டும் நாட்டிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையைக் குறைத்தது. பின்வரும் தரவுகளைப் பார்த்தால் தெளிவான விளக்கம் கிடைக்கும்.

வெளிநாட்டு சுற்றுலா வருமானம் 2017இல் 3.9 பில்லியன் டொலர், 2018இல் 4.4 பில்லியன் டொலர், 2019இல் 3.6 பில்லியன் டொலர், 2020இல் 682 மில்லியன் டொலர், 2021இல் 507 மில்லியன் டொலர். சுற்றுலாத் துறையானது இலங்கையின் 8 மில்லியன் தொழிலாளர்களின் (மொத்த சனத்தொகை 20 மில்லியன்) பெரும் பங்கைக் கொண்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

### உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பினால் ஏற்பட்ட பாதிப்பு

2022 ஆம் ஆண்டு உக்ரைன் மீதான ரஷ்ய படையெடுப்பு எமது நாட்டின் பொருளாதார பேரழிவை மேலும் மோசமாக்கியது. ஏனெனில் ரஷ்யா தேயிலை ஏற்றுமதியில் இலங்கைக்கு இரண்டாவது பெரிய சந்தையாக இருக்கின்றது. மேலும் இலங்கையின் சுற்றுலாத் துறை இந்த இரண்டு நாடுகளையும் பெரிதும் நம்பியுள்ளது. உக்ரைனிய நெருக்கடியானது இலங்கையின் பொருளாதார மீட்சிப் பாதைக்கு தடங்கலாக ஆனதுடன், தேயிலை மற்றும் சுற்றுலாத் துறை ஆகிய இரண்டும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன.

இதே நேரத்தில் இலங்கை பொருளாதாரத்தை கருத்தில் கொண்டு புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் பொருளாதாரத்தில் செழிப்பான நிலையில் இருப்பதனால், மீண்டும் இலங்கை திரும்பி தமது வணிக நடவடிக்கைகளைத் தொடரவும் அழைப்பு விடுக்கப்பட்டு வருவதும் குறிப்பிடத்தக்கது.

உலக வங்கியின் கூற்றுப்படி, "இலங்கையின் பொருளாதாரம் மற்றும் அதன் மக்களின் வாழ்க்கையின் மீது கொவிட்-19 தொற்று நோயின் தாக்கம், சவால்கள் பெருமளவில் இருந்தாலும் 2021 இல் பொருளாதாரம் மீண்டு வரும்." எனப்பட்டது. மீட்சிக்கான சாதகமான அறிகுறிகள் ஏற்கனவே காணப்படுகின்றன என்றும் சுயசார்பை கட்டியெழுப்ப சரியான வரிவிதிப்பு விகிதங்கள் மற்றும் எதிர்காலத்தில் வெளிநாட்டுக் கடன்களை அதிகம் சார்ந்திருப்பதைத் தவிர்ப்பது மிகவும் ஊக்குவிக்கப்படவேண்டும் என்றும் கூறியது. தற்போதைய கடன் நெருக்கடியில் இருந்து இலங்கைப் பொருளாதாரத்தை மீட்பதற்கு முறையான வரி விதிப்புக்கு மேலதிகமாக ஏற்றுமதி சார்ந்த வளர்ச்சி அவசியமாகும் என பொருளாதார நிபுணர்கள் கருத்து தெரிவித்ததுடன், சரியான முறையில் செயற்பட்டால் இலங்கை முழுமையான நிதி மீட்சியை அடையும் என கூறப்பட்டது. இது எதுவும் இலங்கை அரசால் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படவில்லை என்பது கவலைக்குரிய விடயமாக இருந்தபோதும் இன்று பல எதிர்ப்புக்களுக்கு மத்தியில் இவற்றை அரசு நடைமுறைப்படுத்த விளைவது வரவேற்கத்தக்க தொன்றாகும்.

### இயற்கை வேளாண்மை திட்டம்

2021 இல் இலங்கையானது "100% இயற்கை வேளாண்மை" என்ற திட்டத்தைத் துவக்கியது. அதன்படி 2021 யூனில் இருந்து நாட்டில் செயற்கை உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகளுக்கு முழுவதும் தடை விதித்து உத்தரவு இடப்பட்டது. தேயிலை உட்பட வேளாண் உற்பத்தியில் ஏற்படும் சரிவு பற்றி எச்சரித்த அறிவியல் மற்றும் வேளாண் சமூகத்தின் விமர்சனங்களை அரசு புறக்கணித்தது.

இதன் தொடர்ச்சியாக 2021 செப்டெம்பருக்குள், இலங்கை வேளாண் உற்பத்தியில் 50% வரை பெரும் வீழ்ச்சியையும் உணவுப் பற்றாக்குறையையும் சந்தித்தது. தேயிலை தொழில்துறையின் நிலைமையும் சிக்கலானது. வேளாண் துறையில் விளைச்சல் பாதியாக ஆனது. இதனால் செப்டெம்பரில், அரசாங்கம் பொருளாதார அவசரநிலையை அறிவித்தது.

இரசாயன உரங்கள் மற்றும் பூச்சிக்கொல்லிகள் விற்பனை தடை செய்யப்பட்டதால் கடுமையான பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இதனால் மக்கள் வருமானத்தை இழந்தும் உணவுப் பொருட்கள் கிடைக்காமலும் தவிக்கும் நிலைக்கு ஆளாயினர். இந்த நடவடிக்கைகளில் சிலவற்றை அரசாங்கம் ரத்து செய்தது. ஆனால் யூரியாவை இறக்குமதி செய்வதற்கான தடை அப்படியே நீடித்தது. அத்தியாவசியப் பொருட்களை விநியோகிப்பதில் கட்டுபாட்டை இலங்கை கொண்டுவந்தது.

2021 நவம்பரில், உணவுப் பொருட்களின் விலையேற்றம் மற்றும் இயற்கை வேளாண் திட்டத்திற்கு எதிராக வாரக்கணக்கில் போராட்டங்கள் நடந்ததைத் தொடர்ந்து, உலகின் முதல் இயற்கை விவசாய நாடாகும் திட்டத்தை இலங்கை கைவிட்டது. (தற்போது பல சீர்திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன. அவற்றின் பலனை நாம் வருங்காலத்தில் காணலாம்)

2021இலிருந்து பணவீக்க விகிதம் அதிகரித்துவருவது குறித்த கவலைகள் இருந்தபோதிலும், இலங்கை மத்திய வங்கியின் அப்போதைய ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் 2022 ஜனவரியில் இலங்கைக்கு சர்வதேச நாணய நிதியத்தின் உதவி தேவையில்லை என்றார்.

மேலும் இலங்கையால் அதன் வெளிநாட்டுக் கடன்கள் உள்ளிட்ட கடனைத் தீர்க்க முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார். ஆனால் அவரது கூற்று எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. இந்நிலையில் கடன் மறுசீரமைப்புக்கான தொழில்நுட்ப உதவியை பெறுவதற்கு உலகளாவிய சட்ட நிறுவனத்தை நியமிக்க அரசாங்கம் திட்டமிட்டது.

இலங்கையின் பொருளாதாரக் கொள்கைகளை மதிப்பிடுவதற்கும் மீளாய்வு செய்வதற்கும் சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று 2021 டிசெம்பர் 7 முதல் டிசெம்பர் 20 வரை இலங்கைக்கு பயணம் மேற்கொண்டது. 2022 பெப்ரவரி 25 ஆம் நாள் நடந்த வருடாந்த கலந்துரையாடலுக்குப்பின்னர் சர்வதேச நாணய நிதியத்தின் செயற்குழு இலங்கையின் பொருளாதாரம் பற்றி கலந்துரையாடியது. 2022 பெப்ரவரி 25ஆம் திகதி அன்று இலங்கையின் பொதுக் கடன் சுமை தாங்க முடியாதது என சர்வதேச நாணய நிதியம் அறிவித்தது மேலும் பணத் தேவைக்காக பணத்தை அச்சிடுவதைத் தவிர்க்குமாறு இலங்கை அரசாங்கத்தை எச்சரித்தது.

2022 மார்ச் 7 இல் வங்கி நடைமுறையில் சீர்திருத்தங்களை மேற்கொண்டு தேசிய நாணயத்தின் மதிப்பை உடனடியாக நடைமுறைக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதனால் அதிகார பூர்வ ரூபாய் மதிப்பு வரலாறு காணாத வகையில் அமெரிக்க டொலருக்கு எதிராக 229.99 என குறைந்தது. இதனைத் தொடர்ந்து ரூபாய் மதிப்பு மாத மாதம் குறைந்து கொண்டு சென்றது.

இலங்கை பணத்தின் மதிப்பை குறைக்க எடுத்த முடிவானது, சர்வதேச நாணய நிதியத்தின் உதவிக்கான பாரிய முன்னேற்றமாக பார்க்கப்பட்டது. ஆனாலும் இலங்கை ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டதையடுத்து 2022 மார்ச்சில் இலங்கை பங்குச்சந்தையில் அனைத்து பங்குகளின் விலையும் 4 சதவிகிதம் குறைந்தது. இதனால் இலங்கைப் பங்குகள் 4 மாதங்களில் இல்லாத அளவிற்கு வீழ்ச்சியடைந்தன.

மேலும் செலவைக் குறைக்கும் நோக்கோடு மின்சாரத்தை சேமிக்கும் முயற்சியின் ஒருபகுதியாக குறைந்தபட்சம் 2022 மார்ச் இறுதி வரை அனைத்து தெரு விளக்குகளையும் அணைக்குமாறு நிதி அமைச்சர் பசில் ராஜபக்ஷ அரசாங்க அதிகாரிகள் அனைவரையும் வலியுறுத்தியிருந்தார். இருப்பினும், இந்த நடவடிக்கை பெண் தொழிலாளர்களின் பொருளாதார பங்கேற்பு விகிதத்தில் குறிப்பிடத்தக்க எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாகக் கூறப்பட்டது. பல்பொருள் அங்காடிகள் மற்றும் பிற பணியிடங்களில் இரவுப் பணியில் பணிபுரியும் பெண்களின் பாதுகாப்பில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதால் இது நடைமுறைப்படுத்தப்படவில்லை.

(தொடரும்..)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.இந்துக்...

பாடசாலை மாணவன் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று முற்பகல் 11 மணியளவில் இந்த விபத்து சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மாட்டு வண்டி சவாரி போட்டிக்காக வண்டில் மற்றும் மாடுகளை ஏற்றிச் சென்ற கனரக லொறியுடன் மோட்டார் சைக்கிள் நேருக்கு நேர் மோதியதிலேயே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இவ் விபத்தில் யாழ்.இந்துக் கல்லூரியில் உயர்தரத்தில் கல்வி கற்கும் சாவகச்சேரியை சேர்ந்த 19 வயதான சிவபாலன் பிரவீன் என்ற மாணவனே விபத்து சம்பவத்தில் உயிரிழந்துள்ளார்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவரின் சடலம் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (4-7,30,33,60,104)

## குளவி கொட்டி...

பூமியில் உள்ள ஆலயத்திற்கு துப்புரவு வேலைக்காக சென்று, துப்புரவு பணியில் ஈடுபட்டுக்கொண்டு இருந்தவேளை குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளார்.

இந்நிலையில் அவர் வலந்தலை வைத்தியசாலைக்கு அழைத்துச் செல்லப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று அதிகாலை வேளை சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

காரைநகர் - களபூமியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை சிவபாக்கியம் (வயது-63) என்ற பெண்மணியே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (4-7,104)

## அரசியல் தீர்வு...

இலங்கை தமிழரசுக் கட்சியின் இளைஞர் அணியின் புதிய நிர்வாகத் தெரிவு கிளிநொச்சி மாவட்ட தமிழ் தேசியக்கூட்டமைப்பின் கட்சி அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது.

இதன்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலுக்காக 13ஆவது திருத்த சட்டத்தை பயன்படுத்துகிறார். மக்கள் மத்தியில் ஒரு மாயையை உருவாக்குகிறார். அரசியல் தீர்வு விடயத்தை ரணிலிடம் இருந்து எதிர்பார்க்க முடியாது. மக்களை எப்போதும் குழப்பத்திலேயே வைத்திருப்பார் எனத் தெரிவித்தார். (4-7)

## மட்டுவிலில்...

சடலம் மீட்கப்பட்டுள்ளது.

மேற்படி நபர் மின் வயரில் தூக்கிட்டு வயர் அறுந்து கீழே விழுந்த நிலையில் சடலமாக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இவ்வாறு சடலமாக அடையாளம் காணப்பட்டவர் மட்டுவில் கிழக்கைச் சேர்ந்த 42 வயதான தபால் நிலைய ஊழியர் எனத் தெரியவந்துள்ளது.

மேற்படி மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சாவகச்சேரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-7,30)

## 13ஆவது...

மாக அரசாங்கமே நெருக்கடியான நிலையில் உள்ள இந்த தருணத்தில் அரசாங்கம் 13வது திருத்தத்தை விஸ்தரிப்பதற்கு இணங்கினால் அரசாங்கம் தேவையற்ற அழுத்தத்திற்குள்ளாகலாம் என சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.

நாடு வலுவான பொருளாதார நிலையில் உள்ளவேளை 13ஆவது திருத்தத்தை விஸ்தரிப்பது குறித்து சிந்திக்கலாம் என்ற யோசனையை முன்வைக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (4-7)

## இலங்கையின்...

செய்யும் மிலிந்த மொரகொடவுக்குப் பின் அவர் இந்தியாவுக்கான உயர்ஸ்தானிகராக பதவியேற்கவுள்ளார்.

இலங்கையின் புதிய உயர்ஸ்தானிகர் சேனுகா செனவிரத்ன தற்போது ஜனாதிபதி செயலகத்தில் வெளிநாட்டு ஊடகப் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றுகிறார்.

முன்னதாக அவர் வெளிவிவகார செயலாளராக பணியாற்றியதுடன், நியூயோர்க்கில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கையின் நிரந்தரப் பிரதிநிதியாகவும், ஐக்கிய இராச்சியத்தில் உயர்ஸ்தானிகராகவும் பின்னர் தாய்லாந்தில் உள்ள இலங்கைத் தூதுவராகவும் பணியாற்றி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (4-7)

## ஹெகலியவுக்கு...

கையொப்பங்களுடன் கூடிய மனு சபாநாயகரிடம் சமர்ப்பிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (4-7)

## மோ.சைக்கிள்...

மோதுண்டு படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் கிளிநொச்சி பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இருந்த போதிலும் சிகிச்சை பலனின்றி நேற்று காலமானார்.

சம்பவம்தொடர்பில் மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருவதுடன் விபத்துடன் தொடர்புடைய மோட்டார் வண்டி சாரதியையும் பொலிஸார் கைது செய்துள்ளனர். (4-7,316)

## தமி...

அடிகளார் தெரிவித்துள்ளார்.

இதில் பல்கலைக்கழக சமூகத்தினது பங்களிப்பு புலமைசார் தளத்தில் அத்தியாவசியமானது அதே போன்று சட்டரீதியாக பிரச்சினைகளை ஊழிஜ்ஜாலிய சட்டவாளர்களின் பங்களிப்பு இப்போதுபோன்று தொடர்ந்து கிடைப்பதுடன் அது அனைத்து பிராந்திய மட்டத்திலும் ஒருங்கிணைத்த நிபுணத்துவத்துடன் இருப்பது மேலும் பலம் சேர்க்கும்.

அத்துடன் தமிழ்த் தேசிய செயற்பாட்டாளர்கள் பல்கலை உள்ளிட்ட உயர் கல்வி மாணவர்கள் மேலும் வீச்சாக போராட்டங்களை மக்கள் சார்ந்ததாக ஒழுங்கமைக்க வேண்டும்.

அரசியலாளர்கள் தொடர் அழுத்தத்தை அரசுக்கு வழங்குவதுடன் பாராளுமன்றை புறக்கணித்தல் உட்பட ஒத்துழையாமை இயக்கத்திற்கு தயாராக வேண்டும்.

மேலும் பன்னாட்டு மற்றும் இந்திய அரசின் கவனத்தை மேலும் ஈர்த்து இந்த பாரிய பௌத்த மேலாண்மையை திணிக்கும் பூர்வீக தமிழர்களின் சிவ வழிபாட்டு இடங்களை மாற்றியமைக்கும் செயற்பாடுகளில் அரசுக்கு அழுத்தம் கொடுக்க அனைத்து தரப்பினரும் ஒட்டுமொத்தமாக எம்முள் இருக்கும் அனைத்து வேறுபாடுகளையும்களைந்து முன்வருவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)


நாகபூஷணி அம்மன் அருளுடன்
கனகலிங்கம் திலகவதி யாழ்ப்பாணம்
DLB, NLB

30 இலட்சத்திற்கு மேற்பட்ட பணப்பரிசு 7 தினங்களில் 3 முகவர்கள் மூலம் NLB கனகலிங்கம் மூலம் 11.8 தனநிதானய லொத்தர் சீட்டிழுப்பின் மூலம் 1 லட்சம் ரூபாயும் 12.8 மகஜன சம்பத லொத்தர் சீட்டிழுப்பில் 1 இலட்சம் ரூபாயும் மேலும் இதர பரிசுகளுடன் மொத்தமாக 13 இலட்சத்து இருபத்தாறாயிரத்து 200 வெல்லப்பட்டது.

DLB கனகலிங்கம் திலகவதி மூலம் 8.8 கோடிபதி கப்ருக மூலம் 2 இலட்சம் ரூபாயும் அதே தினத்தில் இடம்பெற்ற சசிரி லொத்தர் சீட்டிழுப்பில் 200000 இலட்சம் ரூபாயும் மேலும் இதர பரிசுகளுடன் பதினைந்து இலட்சத்து 460/= வெல்லப்பட்டது. NLB கனகலிங்கம் சிவகரன் மூலம் 1,25,000/= பங்கிட்டு வழங்கப்பட்டுள்ளது.

வாங்குவோம் வெல்வோம்
கனகலிங்கம் திலகவதி, கனகலிங்கம் சிவகரன்
(16710) 077 603 1723

மெகா பவர்
திகதி 13/08/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1553
வெற்றி இலக்கங்கள்: H 07 31 44 62 69
61415

தன நிதானய
திகதி - 2023.08.13
சீட்டிழுப்பு இலக்கம் - 1235
L 27 28 31 33 L
22325

லக்கி 7
திகதி 13.08.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0031
L7 இலக்கம் 2 8
வெற்றி இலக்கினம்: சிம்மம்
வெற்றி இலக்கங்கள்: 3 7 6 7 4 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3447
சீட்டிழுப்பு திகதி 13.08.2023
U 05 12 36 72
U 78367

HANDAHANA
சீட்டிழுப்பு திகதி 2023.08.13
சீட்டிழுப்பு இலக்கம் 514
மேஷம் 01 06 23 34 மேஷம்

மஹஜன சம்பத
திகதி 2023/08/13
சீட்டிழுப்பு இலக்கம் 5205
L 3 3 6 3 5 2

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2179
சீட்டிழுப்பு திகதி 2023.08.13
வர்ணம் செம்மஞ்சள்
தினம் ஞாயிற்றுக்கிழமை
16 54 55 72 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,768,284.40
12 48 58 60 N

சனிதா
திகதி 2023.08.13 வெற்றி வாரம் 4340
26 35 50 60 Y
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,123,104.00
08 21 24 69 U

சசிரி
வெற்றி வாரம் 362
சீட்டிழுப்பு திகதி 2023.08.13
கபிலம்
37 39 40
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,693,280/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3891
சீட்டிழுப்பு திகதி 2023.08.13
வர்ணம் ஊதா
தினம் ஞாயிற்றுக்கிழமை
05 29 35 51 கும்பம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 3,739,424/-
13 21 26 38

கப்ருக
திகதி 2023.08.13 வெற்றி வாரம் 1355 வர்ணம் மஞ்சள்
F 37 08 12 14 16
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.427,707,634.20
06 30 52 55 D
தொலைபேசி 011-2 333 546-47 Web: www.dlb.lk

அட கோட்டிபதி
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2005
சீட்டிழுப்பு திகதி : 2023.08.13
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ 50,197,672/-
05 13 25 45 F
37 60 71 75 T


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியங்காட்டில் சடலம் மீட்பு; சந்தேகத்தில் அறுவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கல்வியங்காடு ஜி.பி.எஸ் விளையாட்டு அரங்க பகுதியில் நேற்று முன்தினம் நிர்வாண நிலையில் ஆண் ஒருவரின் சடலம் அடிகாயங்களுடன் மீட்கப்பட்ட நிலையில், அவர் கொலை செய்யப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் விஷேட குற்றதடுப்பு பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினரால் கைது நடவடிக்கை இடம் பெற்றுள்ளது.

கோப்பாய் மற்றும் சித்தங்கேணி பிரதேசங்களைச் சேர்ந்த 4 ஆண்களும் 2 பெண்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சடலமாக மீட்கப்பட்ட நபர் கோப்பாய் பிரதேசத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவரை பாடசாலைக்கு ஏற்றி இறக்கி வரும் நிலையில் குறித்த நபர் சிறுமியுடன் தவறாக நடந்ததாக சிறுமி தனது தாயாருக்கு தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் குறித்த தகவலை தாயார் சித்தங்கேணியில் உள்ள சிறுமியின் மாமனுக்கு தெரிவித்திருந்த நிலையில், அவர் கோப்பாய் வந்து குறித்த நபரை சித்தங்கேணி அழைத்துச் சென்று அங்கு வைத்து விசாரித்த போது அந்த நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பின் அந்த நபரை கோப்பாய் கொண்டுவந்து அவரது இல்லத்தில் விட்டுள்ளனர். அவ்வாறு வீட்டில் விடப்பட்ட நிலையில் அவர் நிர்வாண நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்த நபரின் உடலில் அடிகாயங்கள் காணப்பட்ட பொழுதும் உயிர் பிரியக் கூடிய வகையில் காயங்கள் பாரதூரமானதாக இல்லை எனவும் குறித்த நபர் ஏற்கனவே இருதய நோயினால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் மாரடைப்பினால் உயிரிழந்திருக்கலாம் எனவும் ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சம்பந்தப்பட்ட சிறுமி இன்று சட்ட வைத்திய அதிகாரியின் பரிசோதனைக்கு உட்படுத்தவுள்ள நிலையில், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இன்று நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர்.

(4,7,104)


வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (16686)

076 825 7716 (ஆகாஸ்)

வேலையாட்கள் தேவை

கிளிநொச்சி மாவட்டத்தில் இயங்கிவரும் உயர்தர உணவகம் ஒன்றிற்கு தகுதியான வேலையாட்கள் தேவைப்படுகின்றனர்.

- சமையலாளர் (Cook)
- சமையல் உதவியாளர் (Kitchen Helper)
- உணவு பரிமாறுபவர் (Waiter)

குறித்த வெற்றிடங்களுக்கு ஆண், பெண் இருபாலாரும் எதிர்பார்க்கப்படுவதுடன், குறைந்தது இரண்டு வருட அனுபவத்தைக் கொண்டிருக்க வேண்டும். வெளிமாவட்டத்தைச் சார்ந்தவர்களுக்கு தங்குமிட வசதி உண்டு. (16711)

Prem brothers,
இல.85, திருநகர், கிளிநொச்சி.
077 714 2939, 021 228 2919


## விகாரைகளில்...

முன்வைக்கப்பட்டுள்ள நிலையில், அது குறித்து பொலிஸ் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை அரசியலில் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியாகவே வலம் வரும் மேர்வின் சில்வா, ஊடக நிறுவனத்துக்குள் புகுந்து தாக்குதல் நடத்தியமை, அரச ஊழியரை மரத்தில் கட்டி வைத்து தாக்கியமை, முன்னேஸ்வரம் ஆலயத்துக்குள் புகுந்து வேள்வி பூஜையை தடுத்து நிறுத்தியமை போன்ற அடவாடிகளில் ஈடுபட்ட ஒருவராக பலராலும் அறியப்படுகின்றார்.

ராஜபக்ஷக்களின் சகாவாக அவர்களின் அமைச்சரவையில் இடம்பெற்றிருந்த மேர்வின் சில்வா, 2015 ஜனாதிபதி தேர்தலில் மகிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்த பின்னர் பொதுத் தேர்தலில் போட்டியிட எந்தவொரு கட்சியும் இடமளிக்காத நிலையில், அரசியல் ரீதியில் ஓரங்கட்டப்பட்டார்.

இந்த பின்னணியில் களனியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய மேர்வின் சில்வா, வடக்கு கிழக்கிலுள்ள மக்களுக்கு பகிரங்க எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

இதன்போது மேலும் உரையாற்றிய அவர், "யாழ்ப்பாணத்தில் உள்ளவர்கள், எமக்கு இந்தப் பகுதி வேண்டும் எனக் கூறுகின்றனர். கிழக்கில் உள்ளவர்கள் எமக்கு இந்தப் பகுதி வேண்டும் எனக் கூறுகின்றனர். தெற்கிலுள்ளவர்கள் எமக்கு இந்தப் பகுதி வேண்டும் என கூறுகின்றனர்.

இங்கு பகுதி பகுதியாக ஒன்றும் இல்லை. இது எமது தாய்நாடு. அதற்கான உறுதிப்பத்திரம் எம்மிடமே உள்ளது. நீங்கள் விரும்பினால் எங்களுடன் சமாதானமாக நல்லிணக்கத்துடன் வாழ முடியும்.

வடக்கிலுள்ள தமிழ் கட்சிகளின் தலைவர்களுக்கு நான் ஒன்றைக் கூறுகின்றேன். பிரபாகரனின் பகையை வைத்துக் கொள்ள வேண்டாம். பிரபாகரன் ஆட்கொலை செய்தார்.

இந்த நாட்டின் இராணுவத்தினர், பொலிஸாரை கொன்றுகுவித்தார். அவர்களின் குடும்பங்கள் கஷ்டங்களை எதிர்நோக்கியுள்ளது. அந்தப் பகை இன்றும் உள்ளது. இன்றும் புலம்பெயர் நாடுகளில் இருக்கின்றனர்.

ஜனாதிபதிக்கு நான் மிகவும் மரியாதையுடன் ஒன்றைக் கூறுகின்றேன். இந்த நாட்டிலுள்ள வளங்களை புலம்பெயர்ந்தவர்களுக்கு விற்பனை செய்ய முயற்சித்தால், வீதிக்கு இறங்குங்கள் என களனி மக்களுக்கு கூறுகின்றேன்.

இந்தக் கூட்டத்தின் பின்னர் நான் வடக்கு கிழக்கிற்கு வருவேன். நீங்கள் விகாரைகள் மீது கை வைக்க வந்தால், நீங்கள் மகாநாயக்கர்கள் மீது கை வைக்க வந்தால், நான் வெறுமனே களனிக்கு வர மாட்டேன்.

உங்களின் தலையை எடுத்துக்கொண்டுதான், களனிக்கு மீண்டும் வருவேன். எனக்கு பணியாற்றுவதற்கு அமைச்சுப் பதவிகள் தேவையில்லை என தெரிவித்தார். (4,7)


CANADA
VISITOR VISA
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7063)
0777-068-777
49A, சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்
விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு (C-7063)
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

தேவை
குளிர்பான நிலையம் ஒன்றிற்கு சமையலாளர் மற்றும் Waiter உடனடியாக தேவை. (பெண்கள் மட்டும்)
முகவரி :
தம்பசிட்டி வீதி, பருத்தித்துறை.
(வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி முன்பாக) (16699)
076 013 6770
077 135 4540

சிறந்த ஆசிரியரால்
IELTS
கற்பிக்கப்படும்
NEW BRIGHT
(MAIN STREET JAFFNA)
தொடர்புகளுக்கு : (16678)
076 816 1446


### மடு சென்றுள்ள பக்தர்கள்

## விஷ ஜந்துக்கள் தொடர்பில் விழிப்புடன் இருக்கவும்

### சுகாதார பணிப்பாளர் அறிவிப்பு

(மன்னார்)

மன்னார் மருதமடு திருத்தலத்தில் தங்கியுள்ள பக்தர்களுக்கு மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

மடு மாதா திருத்தலச் சூழலில் பெருமளவில் பக்தர்கள் தங்கியுள்ள சூழ்நிலையில் இடையிடையே மழை பெய்து வருகிறது.

இதனால் தமது வாழ்விடங்களில் வசிக்க முடியாது பல்வேறுபட்ட விஷ ஜந்துக்கள் வெளியேறி வரும் நிலையில் அவற்றால் பக்தர்கள் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் சம்பவங்கள் அதிகரித்துள்ளது.

எனவே ஆலயச் சூழலில் தங்கியுள்ள பக்தர்கள் இது தொடர்பில் விழிப்புடன் இருக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

அத்துடன் ஏதாவது தெரியாத அல்லது அடையாளம் காணப்பட்ட விஷ ஜந்துக்களால் கடி உண்டவர்கள் உடனடியாக மடு தேவாலயத்தில் அமைந்துள்ள வைத்தியசாலைக்கு சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என அவர் தெரிவித்தார்.

மன்னார் மருத மடு திருத்தலத்தின் ஆவணி மாத திருவிழா நாளை 15 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை இடம் பெற உள்ள நிலையில் நாட்டின் பல பாகங்களில் இருந்தும் பல இலட்சக்கணக்கான மக்கள் மடு திருத்தலத்திற்கு வருகை தந்து தற்காலிக கூடாரங்களை அமைத்து உள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (4,7,285)


VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
யாழ் - கொழும்பு பஸ் சேவை
AIRPORT PICK UP DROP SERVICE
அன்னை முத்துமாரி பஸ் சேவை
இனி வரும் காலங்களில்
VILLAGE HOTEL எனும் பெயரில்...
கட்டணம் - 2800/= (16349)
T.P:077 544 8503

WE ARE
HIRING
Academic Coordinator
www.edus.lk
EDUS
Learning made lovable
Requirements
• Strong communication Skills and fluent in English.
• Strong Administration Skills
• MS Office & ICT Knowledge.
• Highly Organized and personable with the ability to meet deadlines.
• Must be able to report and work extended hours depending on work requirements.
• Salary: Basic intern package under probation and then will be increased depending on performance.
• Candidates living in Jaffna close to Kokuvil are preferred.
APPLY NOW
Send your CV to :
careers@edus.lk
077 08 69 328
(16712)




இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் [illegible] என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 14.08.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org